# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

## அ.சா. 3 (LW 3)

| பெயர் | திரு. மரிய இன்னாசி | தொழில் | |
|---|---|---|---|
| த/ பெயர் | அருள்சாமி | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 16.03.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி பிடி வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மைக்கேல்புரத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமியை தெரியும். என் தோட்டத்திற்கு செல்ல வேண்டும் என்றால் ஆரோக்கியசாமி தோட்டத்து வழியாகத்தான் செல்ல வேண்டும். என் வயது தற்போது 58 ஆகும். பிறந்தது முதலே நான் அங்குதான் இருக்கிறேன். இறந்து போன ஆரோக்கியசாமியும், ஆஜர் எதிரிகளும் அங்காளி, பங்காளிகள் ஆவார்கள். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒத்தையூர் தோட்டத்தில் மக்கள் கூட்டமாக இருந்த போது நான் விசாரித்ததில் ஆரோக்கியசாமி இறந்து விட்டார் என தெரிந்து கொண்டேன். நான் வெளியிலிருந்து பார்த்தேன். வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமிக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது வந்ததை கேள்விப்பட்டேனா என்றால் இல்லை. பெருமாள் மகன் சூர்யாவை தெரியும். இறந்து போன ஆரோக்கியசாமி பூர்வீக நிலம் விற்பனை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வந்ததாகவும், மேற்படி விற்பனை செய்யப்படவுள்ள நிலத்திற்கான பங்குத் தொகையை ஆஜர் எதிரிகள் கேட்டு வந்ததாகவும், அதை இறந்து போன ஆரோக்கியசாமி மறுத்து வந்ததாகவும் அதனால் கோபம் கொண்ட ஆஜர் எதிரிகள் இறந்து போன ஆரோக்கியசாமியிடம் முன்பகை

கொண்டு இருந்ததாகவும் அந்த முன் பகை காரணமாக ஆஜர் எதிரிகள் அவ்வப்போது இறந்து போன ஆரோக்கியசாமியிடம் பிரச்சனை செய்வதை வழக்கமாக கொண்டிருந்தாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் தெரியாது. சம்பவ நாளான 18.07.2022 அன்று காலை 09.00மணிக்கு 1வது எதிரியான பிரவின் லாரன்ஸ் இறந்து போன ஆரோக்கியசாமியிடம் பங்கு பணம் கேட்டு தகராறு செய்து 1ம் எதிரியானவர் இறந்து போன ஆரோக்கியசாமியின் வீட்டிலிருந்து கறிக்கட்டையை எடுத்து ஆரோக்கியசாமியின் பின்தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், அதனை தடுக்க சென்ற அ.சா.1ஐயும் மிரட்டி சென்றதாகவும் நான் எதிரிகள் வெளியில் சென்ற போது நான் பக்கத்து தோட்டக்காரர் என்பதால் பார்த்தேன் என்றாலும் என்னுடன் அப்போது சூர்யாவும் இருந்தார் என்றும், எதிரிகள் அப்போது TN 7 AC 8055 என்ற Hero Honda splender வாகனத்தில் தப்பி சென்ற விவரத்தை பார்த்தேன் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 21:04:22 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.